[2024 ஜூன் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மட்டும்தான் பதிவு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்கள். (குறுக்கீடு)

திருமதி வானதி சீனிவாசன்: **குறித்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டைச் சொன்னால், நான் allow பண்ணமாட்டேன். அவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

(ஒ) சிவகாசி, தடை செய்யப்பட்ட பட்டாசு ஆலைகள், மீண்டும் இயக்க நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்கள்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் இன்று காலை 8-15 மணிக்கு Guru Star Fireworks-ல் ஒரு விபத்து நடந்திருக்கிறது. இதுபோன்ற, விபத்துகள் 6 மாதக் காலமாக நடந்துகொண்டிருக்கின்றன. நான் என்ன கவன ஈர்ப்பு கொண்டு வருகிறேன் என்றால், இந்தப் பட்டாசு நிர்வாகம் ஒரு தலைமையின்கீழ் நடைபெறவேண்டும். முன்பு, 2003, 2005 ஆம் ஆண்டுகளில் Explosives Department-தான் பார்த்துக் கொண்டிருந்தது. கடந்த 15 ஆண்டுக் காலமாக பார்த்தீர்களென்றால், Police Department, Revenue Department and Labour Department என இந்த மூன்று department-களும் சேர்ந்து வருவதால், நிறைய factory-கள் இன்றைக்கு suspend ஆகியிருக்கின்றன. கிட்டதட்ட 300 factories suspend ஆகியிருப்பதால், ஆயிரத்திலிருந்து இரண்டாயிரம் workers வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இந்த வேலை இல்லாமல் இருக்கிற workers அடுத்த factory-ல் போய் வேலை செய்வதால்தான், இதுமாதிரி விபத்துகள் மாறிமாறி நடக்கின்றன. 100 பேர் வேலை பார்க்க வேண்டிய இடத்தில், 150 பேர், 200 பேர் உள்ளதால் விபத்துகள் அதிகமாக இருக்கின்றன. இந்த company-ல் இருக்கிற system வேறு; மற்ற company-களில் இருக்கிற system வேறு; இதனால்தான் விபத்துகள் அடிக்கடி நடக்கின்றன. இதுபோன்ற விபத்துகள் நடந்து, suspend செய்த factory-களை. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2024 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: suspend செய்யப்பட்ட factory-ஐ திரும்ப நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமா?

திரு. G. அசோகன்: ஆமாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசின் கவனத்தை ஈர்த்துவிட்டீர்கள். அமருங்கள்.

திரு. G. அசோகன்: இல்லையென்றால், அந்த workers-க்கு வேலை இல்லாத காலங்களில் ஒரு நாளைக்கு 300 ரூபாய் கொடுத்தால் அவர்கள் வேறு வேலை பார்க்காமல், ஒழுங்காக வீட்டிலிருந்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் சொல்வது முக்கியமான விஷயம், வேலைவாய்ப்பு குறித்து அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

(ஓ) காலாவதியான சுங்கச்சாவடிகளில் தொடர்ந்து சுங்கக் கட்டணம் வசூல் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறோம். நேரமின்மைக் காரணத்தை யாம் அறிவோம். ஆகவே இரண்டு மட்டும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்று சொல்லுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: ஓரிரு வார்த்தைகளில் சொல்லி முடிக்கலாம் என்று கருதுகின்றேன். குறிப்பாக, காலாவதியான சுங்கச்சாவடிகளில் தொடர்ந்து சுங்கக் கட்டணம் வசூல் செய்து கொண்டிருப்பதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. Comptroller and Auditor General-ம் ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள், இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.